1993 ஏப்ரல் 1]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். ஆர். சிவபதி : தீப்பெட்டித் தொழிற்சாலை நடத்துவதற்குத் தேவையான எல்லாமூலப் பொருட்களும் கிடைப்பதாலும், தேவையான தொழிலாளர்கள் கிடைப்பதாலும், அரசுத் தரப்பில் மறுபரிசீலனை செய்து ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியார் மட்டுமே தீப்பெட்டித் தொழிலை நடத்தி வருவதாகச் சொன்னார்கள். தொழில் மற்றும் வணிகத் துறையினரின் கீழ் 15 தீப்பெட்டி கூட்டுறவுச் சேவை சங்கங்களும், 26 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் அந்தப் பகுதியில் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

204—

மரங்களை வெட்டுபவர் மீது நடவடிக்கை எடுக்க சமூக நலக் காடுகள் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கல்.

*9357—திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வனத்துறை அலுவலர்கள், மரங்களை வெட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்படுவதுபோல், சமூக நலக் காடுகள் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க சட்டம் இயற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.